# இலங்கை மீதான UN HRC தீர்மானத்திற்கான வழிகாட்டி (2013 மார்ச்)

மாற்றுக்கொள்கைக்கான நிலையம்
பெப்ருவரி 2013


## ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் சபை என்றால் என்ன?

ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் சபை எனப்படுவது ஐக்கியநாடுகள் முறைமைக்குள்ளே உலகம் பூராகவும் மனித உரிமைகளை ஊக்குவித்து பாதுகாப்பதை பலப்படுத்தவதற்கு பொறுப்பாகவும், மனித உரிமைகள் மீறுகை நிலைமைகளை தீர்த்து வைப்பதற்காகவும், அவை தொடர்பான சிபார்சுகளை செய்வதற்குமான ஒரு அரசாங்கங்களுக்கிடையிலான அமைப்பாகும். நியுயோர்க்கிலுள்ள ஐநா பொதுச்சபையால் தெரிவு செய்யப்பட்ட 47 ஐநா உறுப்பு அரசுகளால் UNHRC உருவாக்கப்படுகிறது. UNHRC ஆனது ஜெனிவாவை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது.

## இலங்கை UNHRC யில் ஒரு உறுப்புரிமை நாடாக உள்ளதா?

இல்லை. இலங்கை UNHRC யில் தனது உறுப்புரிமையை 2008 இல் ஐநா பொதுச்சபையில் இடம்பெற்ற தேர்தலில் இழந்துவிட்டது

## 2012 மார்ச் மனித உரிமைகள் சபை அமர்வில் இடம்பெற்றது என்ன?




அமெரிக்க ஐக்கிய அரசுகள் (USA) 40 இணை அனுசரணையாளர்களுடன் சேர்ந்து 2012 மார்ச் 7 ஆம் திகதி இலங்கையில் பொறுப்புக்கூறுதல் மற்றும் மீளிணக்கத்தை ஏற்படுத்தல் என்ற தலைப்பிலான இலங்கை மீதான தீர்மான வரைபை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் (UNHRC) 19வது அமர்வில், இலங்கையில் மனித உரிமைகள் நிலைமை மற்றும் அரசாங்கத்தின் சொந்தமான கற்றுக்கொண்ட பாடங்கள் மீளிணக்க ஆணைக்குழுவின் (LLRC) சிபார்சுகள் உட்பட்டனவற்றை தீர்த்து வைப்பது தொடர்பான வரைபுத் தீர்மானத்தை முன்வைத்தது. 2012 மார்ச் 24 ஆம் திகதி அன்று இத் தீர்மானமானது 24 சார்பான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. 2012 மார்ச் 22 ஆம் திகதி 24 சார்பான வாக்குள், 15 எதிரான வாக்குகள் 08 வாக்களிப்பின்மைகள் என்பவற்றினால் இத் தீர்மானம்

நிறைவேற்றப்பட்டது. இத் தீர்மானத்திற்கு சார்பாக எதிராக பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குகளை இவ் வரைபடம் விளக்குகிறது.

சபையின் தீர்மானங்களுக்கு பக்கமாக இலங்கையின் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், அரச பிரதிநிதிகளாலும் அவர்களின் ஆதரவாளர்களாலும் ஜெனிவா UNHRC கட்டிடத்திற்குள்ளேயே தொந்தரவு செய்யப்பட்டதாக முறைப்பாடுகள் இருந்தன. UNHRC யின் தவிசாளர் லோறா அரச மற்றும் ஏனைய பிரதிநிதிகளால் சிவில் சமூக பிரதிநிதிகள் தொந்தரவு செய்யப்பட்டது குறித்தான அறிக்கைகள் குறித்து அக்கறை தெரிவித்து ஒரு கூற்றை வெளியிட்டார்.

**தீர்மானம் எதற்கு அழைப்பு விடுத்தது?**

தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்ட மூன்று பிரதான விடயங்கள் இருந்தன.

- இலங்கை அரசாங்கத்தின் மீதான முதலாவது அழைப்பானது LLRC அறிக்கையின் உருப்படியான சிபார்சுகளை அமுல்படுத்தும்படியும் அதனது உரிய சட்டக் கடப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான எல்லா மேலதிக நடவடிக்கைகளை எடுக்கும்படியும் எல்லா இலங்கையர்களுக்குமான நீதி, சமத்துவம், பொறுப்புக்கூறல், மீளிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கான நம்பத்தகுந்ததும் சுயாதீனமானதுமான செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான அர்ப்பணிப்பையும் கேட்டிருந்தது.

- இலங்கை அரசாங்கமானது கூடிய விரைவில், விபரமான நடவடிக்கைகளின் ஒரு முழுமையான செயற்திட்டத்தை சமர்ப்பிக்கும் படியும், சிபார்சுகளை LLRC அமுல்படுத்துவதற்கு எடுக்கும் மற்றும் சர்வதேச சட்டங்களின் சொல்லப்பட்ட மீறுகைகள் குறித்தும் கவனிக்கும்படியும் இரண்டாவது விடயம் வேண்டுகோள் விடுக்கிறது.

- மூன்றாவதாக மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தை (OHCHR) தூண்டுவதுடன் உரிய விசேட செயன்முறைகளை வழங்கும்படியும் இலங்கை அரசாங்கமானது இப்படிநிலைகளை அமுல்படுத்துவது மீதான மதியுரைகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை ஏற்றுக்கொள்ளும்படியும் கேட்கிறது. 22வது அமர்வின்பொழுது அவ்வாறான உதவிகளின் ஏற்பாடுகள் தொடர்பாக சபைக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கும்படி அது OHCHR க்கு வேண்டுகோள் விடுக்கிறது. விசேட செயன்முறைகளாவன கல்விக்கான உரிமை மற்றும் கட்டாய அல்லது விருப்பத்திற்கு மாறாக காணாமற்போதல் மீதான பணிக்குழு மீதான விசேட அறிக்கைகள் போன்ற விடயப்பரப்புக்கள் மீது அறிக்கை தயாரித்து மதியுரை வழங்குவதற்காக ஐநாவால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் அல்லது 1967 இல் இருந்து குடிகொண்டிருக்கும் பலஸ்தீனிய பகுதிகள் போன்ற நாடுகள் தொடர்பாகவும் மனித உரிமை நிலைமைகள் மீதான விசேட அறிக்கைகள்

**இலங்கைக்குள்ளேயே தீர்மானத்திற்கு ஆதரவும் எதிர்ப்பும் இருப்பது ஏன்?**

தீர்மானத்தை நோக்கி இலங்கைக்குள்ளே ஆதரவும் எதிர்ப்பும் உள்ளது. சில அரசியல் கட்சிகளும் சிவில் சமூகக் குழுக்களும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சனசமூகங்களும் தீர்மானத்தை ஆதரித்ததுடன் அவ்வாறே தொடர்ந்தும் உள்ளன. அவைகள் தனது அரசாங்கத்தின் சொந்த ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுல்படுத்த இலங்கை அரசாங்கத்தை செய்வதின் மீது கவனம் செலுத்துகின்றன. LLRC அதனது இறுதி அறிக்கையில் கூட அரசாங்கம் ஒரு அமைச்சுக்களுக்கிடையிலான குழுவினை அமைத்திருந்தும் கூட அதனது LLRC

யினது இடைக்கால சிபார்சுகளை அமுல்படுத்தவில்லை என LLRC தனது இறுதி அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருந்தது.

LLRC க்கு முன்பாகவே கூட வேறு ஆணைக்குழுக்கள் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டவைகள் உட்பட அறிக்கைகளை சமர்ப்பித்ததுடன் அவைகள் பொதுமக்களுக்கு கிடைக்கச் செய்யப்படாததுடன் அவர்களின் காண்புகள் அமுல்படுத்தப்படவும் இல்லை. LLRC இறுதி அறிக்கையின் ஆங்கிலப் பதிப்பானது 2011 டிசெம்பரிலேயே பகிரங்கப்படுத்தப்பட்டது. LLRC அறிக்கையின் முழுவதும் சிங்கள, தமிழ் மொழிபெயர்ப்புக்கள் 2012 ஆகஸ்டில் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டன. ஆனாலும் அறிக்கையின் காண்புகளை பகிரங்கப்படுத்துவதில் அரசாங்கத்தினால் எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. அமைதி, மனித உரிமைகள் மீளிணக்கம் தீர்மானத்தின் போன்ற கணிசமான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் வரையறையான முன்னேற்றம் கொடுக்கப்பட்டமையானது நோக்கமுடையதாக இருந்ததுடன் விடயங்களிலான முன்னேற்றத்தை வசதிப்படுத்துவதாகவும் பார்க்கப்படுகிறது.

அரசாங்கம், அரசியல்கட்சி செயற்பாட்டாளர்கள், சிவில் சமூகக் குழுக்கள் தீர்மானத்தை இலங்கையின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கான முயற்சியாக விமர்சித்து எதிர்த்திருந்தது. மேலும் அரசாங்கம் பல எண்ணிக்கையான ஏற்பாடுகளை மனித உரிமை, அமைதி, மீளிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக எடுத்துள்ளதாகவும் வெளிப்புற ஈடுபடுகையானது இதுவரை எடுக்கப்பட்ட படிநிலைகளில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துமெனவும் சிலர் குறிப்பிட்டிருந்தனர். இத் தீர்மானங்கள் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் வெளிப்புற தலையீடுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை. இவைகள் இலங்கை அரசாங்கம் தனது கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான ஆதரவை வழங்குவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருந்தது. UNHRC ஏனைய ஐநா உறுப்பு அரசுகள் மற்றும் ஏனைய காண்புகளை முழுமையாக அமுல்படுத்துவதற்கு தொழில்நுட்ப உதவியை வழங்கக்கூடிய ஏனைய செயற்பாட்டாளர்களின் ஆதரவுக்கானவைகளே தீர்மானம் வழங்குகிறது. சில அரசாங்கத்தின் கூட்டுக்கட்சிகள், ஐக்கிய அரசுகளால் அனுசரணை செய்யப்பட்ட தீர்மானத்திற்கு ஆதரவளித்தவர்கள் இலங்கைக்கு எதிரானவர்கள் என்ற நிலைப்பாட்டை எடுத்ததுடன் அவர்களைக் காட்டிக்கொடுப்போர் எனவும் கூறியது.

**தீர்மானத்திலிருந்து அரசாங்கம் செய்தவைகள் என்ன?**

2012 மேயில் LLRC யின் சிபார்சுகளை அமுல்படுத்துவதற்கு ஒரு விசேட செயலணியை நியமிப்பதாக அரசாங்கம் அறிவித்ததுடன், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீளிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுல்படுத்துவதற்காக ஒரு தேசிய செயற்திட்டத்தை வெளியிட்டதும் அரசாங்கத்தினால் நகர்த்தப்பட்ட எல்லா

சாதகமான நகர்வுகளாகும். தேசிய செயற்திட்டத்தால் இனங்காணப்பட்ட செயற்பாட்டாளர்கள் மற்றும் நேரஎல்லை வரம்புகள் (3-36 மாதங்கள்) என்பன 2012 ஜுலையில் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டன. எவ்வாறாயினும் தேசிய செயற்திட்டம் மற்றும் LLRC ஆல் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகளின் தெரிவுத்தன்மை உட்பட்டவை மற்றும் ஆலோசனை வழங்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் களத்திலுள்ள பிரச்சினைகளுக்கிடையிலான தொடர்பின்மை தொடர்பாக அக்கறைகள் உள்ளன.

2012 மார்ச்சில் அரசாங்கம் மனித உரிமைகள் ஐக்கியநாடுகள் உயர்ஸ்தானிகர் நவி பிள்ளையை இலங்கைக்கு விஜயம் செய்யும்படி ஒரு அழைப்பு விடுத்திருந்தது. எவ்வாறாயினும் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் தனது அலுவலத்திலிருந்து ஒரு தூதுக்குழுவினை 2010 செப்ரெம்பரில் விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை மதிப்பீடு செய்ய அனுப்பி வைத்திருந்தார். மூன்று உறுப்பினர்களைக் கொண்ட இத் தூதக்குழுவானது வடக்கிற்கு சுற்றுலா மேற்கொண்டதுடன், கொழும்பில் அரசாங்க அதிகாரிகள் அரசியல்கட்சிகளின் உறுப்பினர்கள் சிவில் சமூக உறுப்பினர்களுடன் கலந்துரையாடியது, இதனுடைய காண்புகளின் அறிக்கையானது இப்பொழுது வெளியிடப்பட்டதுடன் UNHRC யின் 22வது அமர்வின்பொழுது உயர்ஸ்தானிகரால் சமர்ப்பிக்கப்படும்.

**வரவிருக்கும் UN HRC அமர்வின்பொழுது இலங்கை நிலைமையானது கலந்துரையாடலுக்கு எடுத்துக்கொள்ளப்படுமா?**

ஆம். 2013 பெப்ருவரி 25 இலிருந்து மார்ச் 22 வரை நடைபெற இருக்கும் UNHRC யின் 22வது அமர்வின்பொழுது இலங்கை தொடர்பாக தனது அறிக்கையை மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவி பிள்ளை சமர்ப்பிப்பார். ஐக்கிய அமெரிக்க அரசுகள் மற்றும் ஏனைய உறுப்பு அரசுகளும் இலங்கை மீதான தீர்மானத்தை 22வது அமர்வில் ஆதரிப்பதாக குறிப்பிட்டுள்ளனர்

**உயர்ஸ்தானிகரின் அறிக்கையில் என்ன உள்ளது?**

2013 பெப்ருவரி 11 ஆம் திகதி OHCHR ஆல் விடுக்கப்பட்ட அறிக்கையானது LLRC யின் சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளனவா, அவற்றை அமுல்படுத்துவதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதா என ஆராய்வதுடன் பரிசோதிப்பிற்கான தனது சொந்த சிபார்சுகளையும் வழங்குகிறது. இவ் அறிக்கையானது OHCHR யின் தொழில்நுட்ப சுற்றுப்பயணத்தில் உள்ள காண்புகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன் தொழில்நுட்ப ஒப்பந்தத்திற்கான சாத்தியப் பரப்புக்களாக 2012 இல் முன்வைக்கப்பட்ட தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்கான விடயப்பரப்புக்களில் இலங்கை அரசாங்கத்திற்கான ஒத்துழைப்பிற்கான உயர்ஸ்தானிகரின் கடிதத்திலிருந்தான காண்புகளையும் இவ் அறிக்கை கொண்டுள்ளது. அரசாங்கம் முன்பு தான் கூறிய அறிமுகப்படுத்தும் எனக் கூறிய, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் பாதுகாப்பு சட்டமூலம் இலங்கைக்கான விஜயங்களுக்கான சில விசேட செயன்முறைகளாக வேண்டுகோள் விடுக்கப்பட்டவைக்கான அரசாங்கத்தின் வேண்டுகோள் சாதகமான பதிலிறுப்புக்கள் போன்ற முன்பு அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்ட சட்டப் பந்திகள் உட்பட்டனவற்றை அரசாங்கத்திற்கான பல சிபார்சுகளை இவ் அறிக்கை செய்கிறது..

*(OHCHR யின் இவ் அறிக்கையானது பின்வரும் இணையத்தளத்தில் காணக்கூடியதாக உள்ளது - http://www.ohchr.org/Documents/HRBodies/HRCouncil/RegularSession/Session22/A-HRC-22-38_en.pdf)*